





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*





# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 13.12.2019

We Shine Academy™

guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**

Chrompet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- உலக செய்திகள்
- விளையாட்டு செய்திகள்
- நூல் வெளியீடு





We Shine Academy™






# தேசிய நிகழ்வுகள்

- **ஹைதராபாத் என்கவுண்டர் விவகாரத்தை விசாரிக்க நீதிபதி வி.எஸ்.சிர்புர்க்கர் தலைமையில் விசாரணை ஆணையம்** அமைக்கப்பட்டுள்ளது.
    - உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே இந்த விசாரணை ஆணையத்தை அமைத்துள்ளார்.
    - உச்சநீதி மன்றம் விசாரணை ஆணையம் அமைத்துள்ளதால் தெலுங்கான உயர்நீதி மன்றம், தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஆகியவை நடத்தி வரும் விசாரணைக்கு தடை விதிக்கப்படுகிறது.
    - **செய்தி துளிகள் :**
        - விசாரணை ஆணைய உறுப்பினர்கள்
        - வி.எஸ்.சிர்புர்க்கர்
        - ரேகா சொந்துர் பல்டோடா
        - டி.ஆர். கார்த்திகேயேன்
        - விசாரணை தொடங்கும் நாளில் இருந்து 6 மாதங்களில் விசாரணை அறிக்கையை ஆணையம் வழங்க வேண்டும்.
        - தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவர் H.L.தத்து ஆவர்.

- **"திஷா சட்டத்திற்கு" ஆந்திர அமைச்சரவை ஒப்புதல்** வழங்கியுள்ளது.
    - திஷா சட்டத்தின்படி பாலியல் வன்கொடுமை குற்றத்துக்கு 21 நாட்களில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்.

- ○ பாலியல் வன்கொடுமை வழக்குகளை விசாரிக்க ஆந்திர மாநிலத்தில் 13 மாவட்டங்களில் சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்தவும் இந்த சட்ட மசோதா வழி செய்கிறது.
- ○ **செய்தி துளிகள் :**
    - ▪ ஆந்திர மாநில ஆளுநர் - பிஸ்வபூசன் ஹரிச்சந்தன்
    - ▪ ஆந்திர மாநில முதல்வர் - ஒய்.எஸ்.ஜெகன்மோகன்
    - ▪ 18 வயதுக்கு குறைவான அனைத்துக் குழந்தைகளுக்கும் பாலின வித்தியாசமின்றி பாலியல் துன்புறுத்தலில் இருந்து காக்க 2012-ம் ஆண்டு மத்திய அரசு போக்ஸோ சட்டம் இயற்றியது.

- **பஞ்சாப் நெற்பயிர் எச்சத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி** செய்யும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் முயற்சியை சென்னை ஐஐடி மேற்கொள்ள உள்ளது.
    - ○ இதற்காக **சுக்பீர் ஆக்ரோ எரிசக்தி உற்பத்தி நிறுவனத்துடன் சென்னை ஐஐடி ஒப்பந்தம்** மேற்கொண்டுள்ளது.
    - ○ சுக்பீர் நிறுவனம் பஞ்சாப், உத்திரபிரதேச மாநிலங்களில் 100 சதவீதம் நெற்பயிர் எச்சங்களை கொண்டு டேனிஷ் நிறுவன தொழில்நுட்பத்தின் மூலம் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.
    - ○ **செய்தி துளிகள் :**
        - ▪ தில்லி போன்ற வட மாநிலங்களில் காற்று மாசுபாடுக்கு முக்கிய காரணமாக பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் எரிக்கப்படும் நெற்பயிர் எச்சங்களே காரணம்.

We Shine Academy™

- பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் ஆண்டுக்கு 3.5கோடி டன் வைக்கோல் (நெற்பயிர் எச்சம்) உற்பத்தியாகிறது.
- அனல் மின் உற்பத்தி முறையில் ஏற்கனவே உள்ள டேனிஸ் தொழில்நுட்ப முறையை மேம்படுத்த உள்ளது சென்னை ஐஐடி நிறுவனம்.

## உலக செய்திகள்

- **உலகின் பழமையான ஓவியம் இந்தோனேசியாவில் கண்டுபிடிப்பு**
  - இந்தோனேசியாவில் இரு ஆண்டுகளுக்கு முன்னர் கண்டறியப்பட்ட குகை ஓவியம் 43,900 ஆண்டுகளுக்கு முந்தையது என ஆய்வில் தெரிய வந்துள்ளது.
  - இந்தோனேசியாவின் சுலாவெசி தீவில் இதுபோன்று 242 குகை ஓவியங்கள் கண்டறியப்பட்டள்ளன.
  - **செய்தி துளிகள் :**
    - இதுவரை குகை ஓவியங்கள் ஐரோப்பாவில்தான் முதல்முறையாக வரையப்பட்டதாக கருதப்பட்டு வருகிறது.

## விளையாட்டு செய்திகள்

- **டபிள்யுடிஏ ஆண்டின் சிறந்த வீராங்கனையாக ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பர்டி தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.
  - இணையத்தின் மூலம் நடைபெற்ற தேர்தலில் 82 சதவீதம் பேர் ஆஷ்லி பார்டியை தேர்வு செய்துள்ளனர்.
  - **செய்தி துளிகள் :**

- ஆஷ்லி பார்டி டென்னிஸ் உலகின் முதல்நிலை வீராங்கனை ஆவர்.
- 2019-ம் ஆண்டு பிரஞ்சு ஓபன் உள்பட 4 பட்டங்களை வென்றுள்ளார்.
- ஆண்டின் சிறந்த புதுமுக வீராங்கனையாக கனடாவின் பியான்கா ஆன்ட்ரீஸ்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## நூல் வெளியீடு

- இந்திய செஸ் வீரர் **விஸ்வநாதன் ஆனந்த் சுயசரிதை "மைண்ட் மாஸ்டர்"** என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.
  - தனது செஸ் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களை படிப்பினைகள் ஆகியவற்றை தொகுத்து 2 ஆண்டுகள் இந்நூல் எழுதப்பட்டது.
  - **செய்தி துளிகள் :**
    - ஃபிடே தரவரிசையில் தற்போது ஆனந்த் 15-ஆவது இடத்தில் உள்ளார்.
    - 5 முறை உலக சாம்பியன் பட்டத்தினை ஆனந்த் வென்றுள்ளார்.
    - ஃபிடே உலக சாம்பியன்ஷிப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் ஆனந்த் ஆவர்.
    - இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டர் ஆனந்த் ஆவர்.

## திருக்குறள்

**குறள் எண் : 46**

அதிகாரம் : இல்வாழ்க்கை

குறள் இயல் : இல்லறவியல்

குறள் பால் : அறத்துப்பால்

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**

**போஒய்ப் பெறுவ தெவன்?**

**விளக்கம் :** ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானானால் அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது என்ன?

We Shine Academy TM